மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்திய அரசுப் பணியில் ஈடுபடுத்தப்படும் படைக்கலன் தாங்கிய காவல் படையினருக்காகும் செலவை நிலைமைக்கேற்ப இந்திய அரசோ சம்பந்தப்பட்ட மாநில அரசோ ஏற்றுக் கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த வினா எண். 311 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க ஒற்றிவைக்கப்படுகிறது. அடுத்த வினா 312-க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

Name board at former Chief Minister's residences.

312 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the name board at the bungalow of the former Chief Minister Thiru M. Bhakthavatchalam was removed by some miscreants during the month of August 1967; and

(*b*) if so, the action taken to prevent such incidents being repeated?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) இது போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நிகழா வண்ணம் அப்பகுதியில் காவல் கண்காணிப்பு முனைப்பாக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Was any investigation made in this affair to find out who exactly were the miscreants that were responsible for this kind of mischief?

THE HON. THIRU C. N. ANNADURAI : An investigation was made and the mischief-monger was not found. But the police posted there was promptly suspended for indifference and slack supervision.

DR. H. V. HANDE : Is the Government aware of the fact that my name board also was lost during the regime of the previous Government as well as the present Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am sorry to hear it. But I am glad that the hon. Member is not making much about it.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல், அதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர்கள் எல்லோருக்குமே போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா ? அல்லது இப்போது பதவிபோன முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

1968 மார்ச் 25]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : போலீஸ் பாது காப்பு என்ற பெயரில் சமூகத்தில் உயர்நிலை வகித்துக்கொண்டிருக் கிறவர்கள், அரசாங்கத்தில் உயர்ந்த மட்டத்தில் பணியாற்றிய வர்கள் ஆகியவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று அரசு கருதினல், அப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

கச்சத் தீவின் மீது இலங்கை அரசு .உரிமை கொண்டாடல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஒரு தீர்மான அறிவிக்கை கொடுத்திருக்கிருர். அவர் தற்போது இடத்தில் இல்லை. அடுத்து, திரு. ஏ அ. சுப்பாராஜா அவர்களின் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், "நமது தமிழகத்தைச் சார்ந்த கச்சத் தீவை இலங்கை அரசாங்கம் உரிமை கொண்டாடுவதைக் குறித்து நமது தமிழக அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கையைப்பற்றிய " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தலைவர் அவர்களே, கச்சத் தீவின் சொந்தம் குறித்து புது டில்லி இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சகம் ஏற்கெனவே ஆலோசித்து வருகிறது. கச்சத் தீவின் உடைமை உரிமை பற்றிய செய்கை விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அதுகுறித்த ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறு இந்த அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுள்ளது. இது குறித்து அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. இரு நாடுகளின் நலன் கருதி இதனை மேற் கொண்டு இங்கு விவாதிக்காமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளில் பார்க்கும்போது, கச்சத் தீவு ஏதோ இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற முறையில் அந்த போர்க் கப்பல்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமை